அமைச்சர் அவர்கள் சொல்லிய அந்த கிலோ மீட்டர் தொலைவு என்பது வரும். ஆனால் போடி தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து பணியாற்றுகிற அலுவலர்கள் வந்து சேரவேண்டிய நிலையைக் கணக்கில் எடுத்துப் பார்க்கின்ற போது, 25 கிலோ மீட்டர் தொலைவுக்கும் அதிகமாக வருகிறது. எனவே, மலைப் பிரதேசங்களில் உள்ள மலைவாழ் மக்களின் நலன் கருதி இந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி வரும் ஆண்டிலாவது இந்த துணைக் கருவூலம் அமைவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி வட்டத் தலைநகரங்களிலே ஒரு துணைக் கருவூலம் அமைய வேண்டும் என்பது கொள்கை. அந்த வகையில் உத்தமபாளையம் தனி வட்டமாகப் பிரிந்ததற்குப் பிறகு இந்த உத்தமபாளையத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்கப்பட்டு இருக்கிறது. உத்தமபாளையத்தில் உள்ள கொடுக்கல், வாங்கல் ஆகியவற்றில் பளுவினைக் கணக்கெடுக்கின்றபோது அதைப் பிரித்து அந்த வட்டத்திற்குள்ளே இன்னொரு கருவூலம் அமைப்பதற்கு இப்போது வாய்ப்புக்கூறுகள இல்லை என்பதன் காரணத்தால் இப்போது புதிய கருவூலம் அமைப்பதற்குரிய அத்தியாவசியம் ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 42, திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

42—

நன்னிலம் நீதிமன்றம்.

வினா எண். *1552 திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலத்தில் ஏற்கெனவே இயங்கி வரும் சிவில் நீதிமன்றத்தோடு, கிரிமினல் நீதிமன்றத்தையும் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலத்திற்கு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று வழக்காடும் போது மக்களிடமிருந்தோ அல்லது வழக்கறிஞர் சங்கத்திடமிருந்தோ கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. எனவே, இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

1992 பிப்ரவரி 5]

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலத்தில் பல ஆண்டுக்காலமாக சிவில் நீதிமன்றம் மட்டும் இயங்கி வருகிற காரணத்தால் நன்னிலம் மற்றும் குத்தாலம் தொகுதியைச் சேர்ந்த பகுதிகளின் மக்கள் நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற அதிக தூரத்தில் உள்ள ஊர்களுக்குச் செல்ல மிகவும் சிரமப்படுகிற காரணத்தால் வருகிற ஆண்டிலாவது இந்த நீதிமன்றம் பற்றி பரிசீலனை செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றம் அமைப்பது குறித்து ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உயர் நீதிமன்றத்தினுடைய கிளையோ அல்லது சபார்டினேட் கோர்ட்டோ அல்லது ஸ்பெஷல் கோர்ட்டோ ஆகிய எந்த நீதிமன்றம் அமைக்க வேண்டுமானாலும் அதற்கு அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. அரசுக்குக் கிடையாது. ஆனால் அவர்கள் பரிந்துரை செய்தால் அந்த பரிந்துரையின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கமுடியும். எனவே, தயவு செய்து அரசினிடத்தில் நீங்கள் அமைக்க இருக்கிறீர்களா என்று கேட்பதைவிட, உடனடியாக ஒரு கோரிக்கை ரூபமாக அரசுக்கு அனுப்பினால் நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி ஒப்புதலைப் பெற்று, ஆங்காங்கே தேவைப்படுகிற இடங்களில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன். இது தஞ்சை மாவட்டம் நன்னிலம் சம்பந்தப்பட்டது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கே நீதிமன்றத்திற்கும் அரசுக்கும் சேர்த்து நாங்கள் கோரிக்கை வைத்தால் அதை அரசு பரிசீலிக்கும் என்று. ஏற்கெனவே எங்களுடைய வேலூர் (குறுக்கீடு) ஏற்கெனவே ஒரு 5 கோடி ரூபாய்க்கு .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொன்னேன். மூலக்கேள்வியை ஒட்டி அதிலே ஏதாவது துணைக் கேள்வி இருந்தால்தான் கேட்க வேண்டும் என்று.

அடுத்து வினா எண் 43 திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

43—

தண்டத் தீர்வை குறைப்பு

*3359 திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :